ஐந்துகோட்டையில் இரண்டு குடியிருப்புக்கும் மேலவாயில், பெட்டகோட்டை, பெரியாஞ்சிகுடி மறவர் குடியிருப்பு, ஹரிஜன் குடியிருப்பு, சுப்பிரமணியபுரம், அழகுமடை, மாந்தூர், ஆதியூர், உடையூர் குடியிருப்பு, படப்பை போன்ற குடியிருப்புகளுக்கெல்லாம் தண்ணீர் வழங்குவதற்கு, தாங்கள் அறிவித்துள்ள பெயர்களிலே, இந்த குடியிருப்புகளும் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டுகுடி வட்டாரத்தில் மட்டும் 30மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் 107 பொதுக் குழாய்களும் நிறுவப்பட இருக்கின்றன. ஓரிக்குடி பகுதியில் 13 குடியிருப்புகளுக்கு 16 மீட்டர் உயரத்திற்கு குழாய்கள் போடப்பட இருக்கின்றன. அதிலே 14 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் 48 பொதுக் குழாய்களும் நிறுவப்பட உள்ளன. அதிலே இந்த ஊர்களும் அடங்கும் என்று நான் நம்புகிறேன்.

தம்பிக்கோட்டையில் உப்பு உற்பத்தி.

100—(*வினா எண் 7836) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, தம்பிக்கோட்டையில் உள்ள உப்பு உற்பத்தித் தொழில் நசிந்துவருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அவ்வப்போது ஏற்பட்ட மழை மற்றும் பெரு வெள்ளத்தினால் உப்புத் தொழிற்சாலை பாதிக்கப்பட்டது.

(ஆ) வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு ஒதுக்கிய ரூ. 4 இலட்சத்தில் இத்தொழிற்சாலையில் பாதிக்கப்பட்ட சுற்றுக்கரைகள் மற்றும் உப்புப் பாத்திகள் சீரமைக்கப்பட்டு தற்பொழுது உப்பு உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-20)

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள தம்பிக்கோட்டையில் உள்ள உப்பு உற்பத்தி தொழிற்சாலை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால்துவக்கி வைக்கப்பட்ட திட்டமாகும். அங்கு ஏறத்தாழ இரண்டாயிரம்

1986 நவம்பர் 20]

தொழிலாளர்கள் உப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார்கள். தற்போது சரியான உதவிகள், வசதிகள்போன்றவை இல்லாத காரணத்தினாலும், சரியான பராமரிப்பு அங்கே இல்லாத காரணத்தினாலும் ஏறத்தாழ பாதிக்கும் மேற்பட்டவர்கள் அந்தத் தொழிலை விட்டே செல்கின்ற நிலை உருவாகியிருக்கிறது. அரசு அங்கு உற்பத்தியாகின்ற உப்பை அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு வாங்குவதன் மூலம் ஊக்குவிக்க முடியும். அரசு அதைச் செய்யுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் தூத்துக்குடியில் இருக்கின்ற ஒரு தொழிற்சாலைக்கு அங்கே இருக்கின்ற உப்பை வாங்குவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பரிசீலிக்கிறேன் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? அதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தி அங்கு இருக்கின்ற தொழிலாளர்களை, உப்பு உற்பத்தியாளர்களை அரசு காப்பாற்ற தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1986-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இந்த நிறுவனத்தின் மேம்பாட்டு வேலைகளுக்காக 24.935 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தற்போது 200 பேர் வேலை செய்து வருகிறார்கள். 20 பேர் நிரந்தரமான வேலையில் இருக்கிறார்கள். அந்த உப்புத் தொழில் நசித்து விடாமல் மேலும் தழைத்தோங்க அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மிக்க நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அடுத்து, தம்பிக்கோட்டை உப்பு உற்பத்தி தொழிற்சாலையிடம் சில தனியார் நிறுவனங்கள் பல இலட்சம் ரூபாய்க்கு உப்பினைப் பெற்றுக் கொண்டு மூன்று ஆண்டுகளாக பணம் திருப்பிச் செலுத்தாமல் இருக்கிறார்கள். அதைத் திரும்பப் பெற அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? அதற்கான நடவடிக்கையை விரைந்து எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன், எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லையென்றாலும், அப்படி தனியார்கள் வாங்கிக் கொண்டு பணம் தராமல் இருப்பார்களானால் அதற்கான தக்க நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும்.